# *புனித சியன்னா பெர்னார்தீன் (1380-1444)*

சியன்னாவில் பிறந்தவர்.இவரது சிறு வயதிலேயே பெற்றோர் இறந்தனர்.பக்தியுள்ள அத்தை ஒருத்தி இவரை எடுத்து வளர்த்து வந்தாள். புண்ணியத்திலும், கல்வியிலும் விருத்தியடைந்த இவர் மாதாவின் சபையில் சேர்ந்து நோயாளிகளுக்கு சிறந்த சேவை செய்தார்.நாட்டில் ஏற்பட்ட ஒரு கொடிய கொள்ளைநோயின் போது நமது வசதிகளை பொருட்படுத்தாமல் நோயுற்றோருக்கு உதவி செய்தார். ஏனைய இளைஞர்களையும்இவ்விதம் செய்யும்படி தூண்டினார்."மாதா பிறந்த நாளில் நான் பிறந்தேன்.அவள் பிறந்த நாளில் சந்நியாச உடையைப் பெற்று கொண்டேன். அவள் பிறந்த நாளில் சபை வார்த்தைப்பாடு கொடுத்தேன்.அவள் பிறந்த நாளில்முதல் திருப்பலியை நிறைவேற்றினேன்.அவள் பிறந்த நாளில் கடவுளிடமும் அவளிடமும் போக விரும்புகிறேன்" என்று இவர் அடிக்கடி கூறுவார். அவளைப்போல வாழ பெரும் முயற்சி செய்தார். இவருக்கு ஏழைகள் மீது மிகுந்த இரக்கம் உண்டு. இவர் சிறுவனாயிருந்த பொழுது ஏழை ஒருவன் இவரது வீட்டுக்கு வந்து சிறிது ரொட்டி கேட்டான். அன்று வீட்டில் ஒரு சிறு ரொட்டி மாத்திரம் இருந்தது. உணவின் பொழுது வீட்டில் எல்லோரும் அதைப் பயன்படுத்த வேண்டும். எனவே ஏழையை வெறுங்கையோடு அனுப்ப வேலைக்காரி தீர்மானித்தாள். பெர்னார்தின் இரக்கத்துடன் வேலைக்காரியைப் பார்த்து, "கடவுளைக் குறித்து அவனுக்கு ஏதாவது கொடுப்போம். அல்லாவிடில் பகலிலும் இரவிலும் நான் உணவருந்த மாட்டேன். இந்த ஏழை பட்டினியாய்க் கிடப்பதை விட நானே பட்டினியாக இருக்க விரும்புவேன்" என்றார்.இவர் குருப்பட்டம் பெற்றதும், ஊர் ஊராகச் சென்று போதிக்க தொடங்கினார்.இயேசுவின் திருப்பெயரின் மகிமையைப் பற்றி இவரை தொடங்கியது.பல இடங்களுக்கு பிரசங்கம் செய்ய இவரை அழைத்தார்கள்.15-ஆம் நூற்றாண்டில் இவர் "இத்தாலி நாட்டின்அப்போஸ்தலர்"என்று அழைக்கப்பட்டார். மூன்றுமுறை ஆயராக்க விரும்பினார்கள்.இவரோ மறுத்து விட்டார்.கடவுள் இவருக்குக் கொடுத்த கொடைகளை வெளிக்காட்டாதிருக்க முயல்வார்.முதிர் பிராயத்திலும் பல மாகாணங்களில் பிரசங்கித்து, ஊர் ஊராகச் சென்று ஏராளமாக மக்களை மனந்திருப்பினார். இவருக்கு நோய் வந்தது. சந்நியாசிகள் மக்களை மனந்திருப்பினார்.இவருக்கு நோய் திருப்பெயரை நான் மக்களுக்கு அறிவித்தேன்" என்று பாடும்போது இவர் உயிர் துறந்தார்.

**சிந்தனை:**

உனது சகல செயல்களிலும், முதலில் கடவுளது அரசையும், அவரது மகிமையையும் தேடு. சகோதர அன்பில் நிலைத்திரு.பிறருக்கு நீ போதிக்க விரும்புவதை முதலில் பயிற்சிப்பாய்.(புனித சியன்னா பெர்னார்தீன்)

**செபம்:**

ஆண்டவரே, ஆர்வம் நிறைந்த போதர்களை திருச்சபைக்குத் தந்தருளும்.